**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No. 42/2019**

**2025**ம் வருடம் பிப்ரவரி திங்கள் 25ம் நாள் வாதி தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திருமதி.சேதுராணி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : ராசாத்தி (PW1) கிராமம் :

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>3ம் பிரதிவாதி தரப்பில் விசாரணை:</u>

1. தாவா சொத்து அமைந்துள்ள சாயல்குடி கிராமத்தில் அரண்மனை தெருவில் தான் கடந்த 40 ஆண்டுகளாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். 3ம் வாதி ருக்குமணி எனது தங்கை. அவர் என்னுடன் தான் வசித்து வருகிறார். அதே தெருவில் தான் 3ம் பிரதிவாதியும் வசித்து வருகிறார்.

2. அதே வீட்டில் பெரிய ஜமீன்தார் அண்ணாசாமி பாண்டியன் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். ஒரே தெருவில் வசித்து வருவதால் அவரது குடும்ப விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. அண்ணாசாமி பாண்டியனின் மனைவி ராஜாமணி நாச்சியாரை எனக்கு தெரியுமா என்றால் சொல்ல கேட்டு தெரிந்து கொண்டேன்.

3. அண்ணாசாமி பாண்டியனுக்கும் ராஜாமணி நாச்சியாருக்கும் குடும்ப பிரச்சனை இருந்து வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து உட்பட பல்வேறு சொத்துக்கள் அண்ணாசாமி பாண்டியனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். பூர்வீகமாக

பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும்.

4. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாக்கல் செய்துள்ள விவரங்களை எனது மகன் படித்துப் பார்த்தார். அவர் கூறியதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளித்தேன். எனக்கு படிக்க தெரியாது. பெரிய ஜமீனுக்கும் சின்ன ஜமீனுக்கும் பாகம் கோரி வழக்கு தாக்கல்செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் சொல்ல கேட்டு தெரிந்து கொண்டேன். அவர்களுக்குள் பாகம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியும்.

5. பாகப்பிரிவினையில் தாவா சொத்து உட்பட வேறு சொத்துக்களும் இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. நானும் எனது கணவரும் மாண்பமை பரமக்குடி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.89/2003 வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது நான் நீதிமன்றத்திற்கு சென்றதில்லை. எனது கணவர் தான் வழக்கை நடத்தி வந்தார்.

6. அந்த வழக்கை யார் யார் மீது தாக்கல் செய்திருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மாண்பமை பரமக்குடி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு சொத்து விவரம் எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்ற சொத்திற்கு நான்குமால் தெரியும். வடக்கே இளைய ஜமீன்தார் சொத்தும், கிழக்கே ஆலாட்டுரணி, தெற்கே இளைய ஜமீன்தாரர் கிரையம் பெற்ற சொத்தும், மேற்கே வாய்க்காலும் அமைந்துள்ளது.

7. இளைய ஜமீன்தார் தாக்கல் செய்த பதில் மனுவை எனது மகன்கள் படித்து பார்த்தார்கள் என்று கூறவில்லை. தாவா சொத்து நான் கிரையம் பெறும் போது பெரிய ஜமீன்தார் பெயரில் பட்டா இருந்ததாக வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தவறு. சின்ன ஜமீன்தார் பெயரில் தான் பட்டா இருந்தது. அந்த விவரம் தெரிந்து தான் நானும் எனது கணவரும் கிரையம்

பெற்றோம்.

8. பெரிய ஜமீன்தார் தங்கராஜ் என்பவருக்கு பவர் எழுதிக்கொடுத்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் விவரம் எனக்கு தெரியாது. மேற்படி தங்கராஜ் என்பவரிடமிருந்து தான் நானும் எனது கணவரும் தலா இரண்டு கிரைய ஆவணங்களின் மூலம் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான்.

9. நான்கு ஆவணங்களிலும் குறிப்பிட்டுள்ள நான்குமால்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் மேலே கூறிய நான்குமால்கள் தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
**கடலாடி (மு.கூ.பொ)**